மண்முனைதென் மேற்குபிரதேச சபை -2017
மட்டக்களப்பு

------------------------------------------------------------

1 நிதிக்கூற்றுக்கள;

---------------------

1.1 நிதிக்கூற்றுக்களைசமர்ப்பித்தல்

--------------------------------------

மீளாய்வாண்டிற்கானநிதிக்கூற்றுக்கள் 2018மார்ச் 28 ஆம் திகதிகணக்காய்விற்குசமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடுகணக்காய்வாளர் தலைமைஅதிபதியின் அறிக்கை2018செப்தெம்பர் 13 இல் சபையின் தவிசாளருக்குவழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ளஅபிப்பிராயம்

------------------------------------

இந்தஅறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்டவிடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்துkz;Kidnjd;Nkw;Fபிரதேசசபையின் 2017திசெம்பர் 31 இல் உள்ளவாறானநிதிநிலமையினையும் அத் திகதியில் முடிவடைந்தஆண்டிற்கானஅதனதுநிதிசார் செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாகஏற்றுக்கொள்ளப்பட்டகணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கநிதிக் கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றனஎன்பதுஎனதுஅபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதானகருத்துரைகள்

--------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டில் பல்வேறுநிதிமூலங்கள்மூலம்ரூபா17,519,397பாதைகள் மற்றும் பொதுவிளையாட்டுமைதானம் அமைத்தலுக்காகசெலவுசெய்யப்பட்டிருந்தது. இதன் போதுஆக்கப்பொருள் செலவினக் கணக்குக்குவரவுவைப்பதற்குபதிலாகநிலையானசொத்துக் கணக்கில் வரவுவைக்கப்பட்டிருந்தது.

(ஆ) குப்பைகளைதரம் பிரித்தல் நிலையம் ஒன்றுமாவடிமுன்மாரியில்ரூபா397,853செலவில் அமைக்கப்பட்டிருந்தது. இதன் போதுசொத்துகணக்குவரவு மூலதனமானியக் கணக்குசெலவுவைப்பதற்குபதிலாகவைப்புகணக்கினுடாகவரவும்,செலவும் பதியப்பட்டிருந்தது. இந் நடவடிக்கையினால் மூலதனமானியக் கணக்குமற்றும் சொத்துகணக்குகளில் ரூபா397,853தொகைகுறைத்துகாட்டப்பட்டிருந்தது.

1.3.2 சட்டங்கள்,விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை.

------------------------------------------------------------------------------------------

கீழேகாட்டப்பட்டுள்ளசட்டங்கள்,விதிகள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறுஅவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் போன்றவற்றுடனானதொடர்பு | | | இணக்கமின்மை |
|---|---|---|---|
| (அ)1988 ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் நிதி,நிருவாகவிதிகள். | | | |
| (i) | அத்தியாயம் இன்பிரிவு193 | X | ஆண்டுக்கானஉள்ளபடியானவருமானம் மற்றும் செலவுதொடர்பானவிபரங்கள் வரவுசெலவுதிட்டத்துடன் ஒப்பிடப்பட்டுமுரண்பாட்டுக்கானவிளக்கங்களைஉள்ளடக்கிய கூற்றுதயாரிக்கப்பட்டுகணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. |
| (ii) | அத்தியாயம் இன்பிரிவு197 | X | ஒவ்வொருமாதமுடிவிலும் நுகர்வுக்களஞ்சியப் பொருள் பதிவேடுசெயலாளரினால் சோதனையிடப்பட்டுஒப்பமிடப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | அத்தியாயம் இன்பிரிவு198 | X | புத்தகங்கள் பற்றியதனிப்பட்டியல் ஒன்றுவைக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கைசனநாயகசோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | வாகனங்களுக்குரியஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் மூலப் பொழிப்புக்கள் ஒவ்வொருமாதமும் அடுத்துவரும் மாதத்தின் 15 ஆந் திகதிக்குமுன்னர் கணக்காய்வாளர் தலைமைஅதிபதிக்குச் சமர்ப்பிக்கப்படவேண்டியபோதிலும் சபையினால் பயன்படுத்தப்படும் வாகனங்களின் ஓட்டக்குறிப்புக்கள் மற்றும் மாதாந்தப் மூலப் பொழிப்புக்கள் கணக்காய்வாளர் தலைமைஅதிபதிக்குசமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ)01/2012 ஆம் இலக்க2012 ஜனவரி05 ம் திகதியஅரசநிதிசுற்றறிக்கை | | | ரூபா2,520,668பெறுமதியானகொங்கிறிட் பாதைஅமைத்தல்,விளையாட்டுமைதானம் புனரமைத்தல் மற்றும் குப்பைகளைதரம்பிரிக்கும் நிலையம் அமைத்தல் போன்றவேலைகளுக்குஅங்கீகரிக்கப்பட்டசங்கத்தை தெரிவுசெய்யும்போது இப்பிரிவிலுள்ளஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை. |

2 நிதிமீளாய்வு

-----------------

2.1 நிதிவிளைவுகள்

----------------------

சமர்ப்பிக்கப்பட்டநிதிக்கூற்றுகளின்படி2017திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்தஆண்டிற்கானமீண்டுவரும் செலவினங்களிலும் கூடியவருமானம் ரூபா2,410,502ஆகும். இதனோடொத்தமுன்னையஆண்டின் மீண்டுவரும் செலவினங்களிலும் கூடியவருமானம் ரூபா6,604,178ஆக இருந்தமைநிதிவிளைவுகளில் ரூபா4,193,676வீழ்ச்சியைக்காட்டுகின்றது.

3 செயற்பாட்டுமீளாய்வு

--------------------------

3.1 செயலாற்றல் மீளாய்வு

----------------------------

நிலைபேறானஅபிவிருத்தி இலக்கு

-------------------------------------------

ஐக்கியநாடுகளின் அமைப்பின் அங்கத்துவநாடுகளின் அரசதலைவர்களின் தலைமையில் 2015 ஆம் ஆண்டுநிலைபேறானஅபிவிருத்திமகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டதன் பிரகாரம் சபையினால் 2030 ஆம் ஆண்டில் அடைந்துகொள்ளப்படவேண்டியஅபிவிருத்திநிகழ்ச்சிநிரல் தொடர்பாகஅளவிடுவதற்கானகுறிகாட்டிகளைஉருவாக்கநடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 முகாமைத்துவசெயற்றிறனின்மை

-----------------------------------------

2014 ஆம் ஆண்டுஉற்பத்திசெய்யப்பட்டமோட்டார் கிறேடர் இயந்திரம் ஒன்றுசபைக்கு2015பெப்ரவரி25 ஆம்திகதிகையளிக்கப்பட்டது. இயந்திரத்தை இயக்கக் கூடியஒருபயிற்றுவிக்கப்பட்டவர் நியமிக்காமலேயேவாகனத்தின் ஓட்டுனராகவேலைத் தொழிலாளிஒருவர் பிரதேச சபை செயலாளரினால் 2015திசெம்பர் 02 இல்அமர்த்தப்பட்டிருந்ததோடுஇவ் இயந்திரத்தின் எஞ்சின் 2016திசெம்பர் 06 ஆம் திகதியில் இருந்துபழுதடைந்திருந்தது.

3.3 மனிதவளமுகாமைத்துவம்

---------------------------------

சாரதிமற்றும் நூலகர் பதவிகளுக்குஅனுமதிக்கப்பட்டஆளணியினர் முறையே04மற்றும் 02 ஆக காணப்பட்டபோதிலும் மீளாய்வாண்டில் இருந்துசாரதிபதவிக்குஒருவர் மட்டுமேநியமிக்கப்பட்டிருந்தபோதிலும்வெற்றிடமாகவுள்ளபதவிகளுக்குஅவற்றைநிவர்த்திசெய்வதற்குநடவடிக்கைஎடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.4 ஒப்பந்தநிர்வாகம்

---------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2016மற்றும் 2017ம் ஆண்டுகளில் கேள்விகோரல் முறையைதவிர்த்துபட்டிப்பளைபிரதேசசெயலகநலன்புரிசங்கத்திற்குமுறையேரூபா70,100மற்றும் ரூபா73,605 இற்குகோவில் உற்சவகாலவாகனத்தரிப்பிடம்வழங்கப்பட்டிருந்தது.இச்சங்கத்தினால் 2017ம் ஆண்டில் விற்பனைசெய்யப்பட்டபற்றுச் சீட்டுகளின் பிரகாரம் ரூபா521,550வருமானம்

உழைக்கப்பட்டிருந்ததுடன் வாகனத்தரிப்புபாதுகாப்பிற்காகவினியோகிக்கப்பட்டபற்றுச் சீட்டுகளில் சபையின் இறப்பர் முத்திரைபொறிக்கப்பட்டிருக்கவில்லை.சபையினால் இச்சேவையைநடாத்தியிருந்தால் சபையினால் ரூபா521,550வருமானம் உழைத்திருக்கலாம் அல்லதுகட்டணம் அறவீட்டுபெறுமதியினைகுறைத்துபத்தர்களுக்குஇச் சேவையினைவழங்கியிருக்கலாம்.

(ஆ) 2016மற்றும்2017ஆண்டுகளில் மொத்தம் 5,993,786தேசியநீர் வழங்கல்மற்றும் வடிகால் அமைப்புசபைக்குபண்டாரியாவெளி,கற்சேனை,மாவடிமுன்மாரிபோன்ற இடங்களில் உள்ளகுடும்பங்களுக்குநீர் வழங்கல் சேவையைபெற்றுகொள்வதற்காகவழங்கப்பட்டிருந்தும் இதுவரைஅப்பிரதேசமக்களுக்குநீர் வழங்கப்பட்டிருக்கவில்லை.

4 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

---------------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டுவிடயங்கள் தொடர்பாகவிசேடகவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாடுகள் | விசேடகவனம் செலுத்தவேண்டியவிடயங்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | பேரேடுகள் நாளதுவரையாகமுறையாகபேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) பாதீடுதயாரித்தல் | பாதீடுதயாரிக்கப்படும் போதுஉரியவிடயங்கள் பகுப்பாய்வுசெய்தல்மற்றும்கவனத்தில்கொள்ளப்படுதல் வேண்டும். |
| (இ) வருமானமுகாமைத்துவம் | வருமான மூலங்களைகண்டறிந்துவருமானங்களைசேகரிக்கநடவடிக்கைஎடுக்கப்படவேண்டும். |